1986 மே 8]

திரு வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு சங்கங்கள் மூலமாகக் கட்டப்படுகிற கூடங்களின் வேலைகள் தாமதமாக நடைபெறுகின்றன. அவை உடனடியாக நடைபெறுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, கூடியவிரைவில் கட்டி முடிக்க விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவன இரவு காவலர்கள்.

714—(* வினா எண். 9053) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்களில் பணிபுரியும் இரவு காவலர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களின் சம்பள விகிதத்தை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : இல்லை.

திரு. சைதை. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றியமைக்கின்ற செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் மத்திய குடோனில், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணிபுரியும் இரவு காவலர்களுடைய சம்பள விகிதம் 350 ரூபாயிலிருந்து குறைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு குறைக்கப்பட்ட அந்தச் சம்பள விகிதத்தை மாற்றி அதிகரிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? ஐந்தாண்டு, ஏழாண்டுக் காலங்கள் அங்கே தற்காலிகமாகப் பணி புரிகிற தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்களா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த தகவலின் மீது அறிக்கை பெறப்பட்டு, இலாக்கா ஆய்வு செய்து அவசியமானால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. சைதை சா. துரைசாமி: தலைவர் அவர்களே, கைத்தறி வார கண்காட்சியில் விற்பனைக்கென்று தற்காலிகப் பணியாளர் களை நியமிக்கிறார்கள். அந்தப் பணிக்கு ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட வேண்டும்.

தீப்பெட்டித் தொழிலுக்கு விற்பனை வரி.

715—(*வினா எண். 7312) திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தீப்பெட்டித் தொழிலுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: தீப்பெட்டித் தொழிலுக்கு விற்பனை வரியிலிருந்து வரிவிலக்கு அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. ஆர். ரெங்கசாமி: தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிலுக்கு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் காலத்தில் சேல்ஸ் டாக்சிலிருந்து விலக்கு கொடுத்தார்கள். அது முக்கியமான குடிசைத் தொழிலாகும் என்பதுதான் காரணம். ஆகவே அரசாங்கம் பரிசீலனை செய்து தீப்பெட்டித் தொழிலுக்கு வரி யிலிருந்து விலக்கு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது பெருந்தலைவர் காமராசர் காலத்தில் என்று சொன்னார்கள். அதுவல்ல, பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோது 1-4-1966 முதல் 4-9-1979 வரையில் தீப்பெட்டித் தொழிலுக்கு 13 ஆண்டுகள் வரிவிலக்கு செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 4-3-1982 முதல் இரண்டு விழுக்காடு ஒருமுனை வரி விதிக்கப்படுகிறது. முன்பு பலமுனை வரி விதிக்கப்பட்டது.